**ஹோமாகம பிரதேச சபை - 2020**

---

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

ஹோமாகம பிரதேச சபையின் 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறான சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் கூற்று, அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான விரிவான வருமானக் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று, முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகள் மற்றும் ஏனைய விளக்கமளித்தல் தகவல்களின் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2020 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபை சட்டத்தின் 172 (I) உப பிரிவு மற்றும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையில் உள்ளடக்கப்பட்ட ஏற்பாடுகளின் பிரகாரம் எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் காணப்பிக்கப்பட்டுள்ளன.

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்டுள்ள விடயங்களிலிருந்தான தாக்கங்களைத் தவிர்த்து, நிதிக்கூற்றுக்களிலிருந்து 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறு சீதாவக்க பிரதேச சபையின் நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதன் நிதிச் செயலாற்றல் மற்றும் காசுப்பாய்ச்சல் என்பன உள்ளூராட்சி மன்றங்களுக்கான இலங்கை பொதுத்துறை கணக்கீட்டுக் நியமங்களுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கின்றது பிரதிபலிக்கின்றது என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக எனது பொறுப்பு, கணக்காய்வாளரின் பொறுப்பு என்ற பிரிவில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக முகாமைத்துவத்தின் மற்றும் தொடர்பான ஆளுகைத் தரப்பினரின் பொறுப்புக்கள்

இந்நிதிக்கூற்றுக்களை உள்ளூராட்சி மன்றங்களுக்கான இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுக்கு அமைவாக தயாரித்தல் மோசடிகள் மற்றும் தவறுகள் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் இன்றிய நிதிக்கூற்றுக்களை தயாரிக்க கூடிய வகையில் உள்ளகக் கட்டுப்பாட்டினை தீர்மானித்தல் முகாமைத்துவத்தின் பொறுப்பாகும்.

பிரதேச சபையின் நிதி அறிக்கையிடல் நடைமுறை சம்பந்தமான பொறுப்பு ஆளுகைத் தரப்பினர்களால் ஏற்றுக் கொள்ளப்படும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 16(1) உப பிரிவின் பிரகாரம் பிரதேச சபையின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு முடியுமான வகையில் சொந்த வருமானங்கள், செலவுகள், சொத்துக்கள், பொறுப்புக்கள் என்பன தொடர்பாக முறையான ஏடுகள் மற்றும் அறிக்கைகள் பேணப்படுதல் வேண்டும்.

**1.4 கணக்காய்வு விடயப் பரப்பு (நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள்)**

---

ஒட்டுமொத்தமாக நிதிக்கூற்றுக்கள் மோசடி மற்றும் தவறுகளின் காரணமாக ஏற்படுகின்ற பொருண்மையான பிறழ் கூற்றுக்களற்றவை என்பதற்கு நியாயமான உறுதிப்பாட்டை வழங்குவதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வு அறிக்கையை வழங்குவதும் எனது குறிக்கோளாகும். நியாயமான உறுதிப்பாடானது உயர் மட்டத்திலான ஒரு உறுதிப்பாடாகக் காணப்படுகின்ற போதிலும், இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எவ்வேளையிலும் பொருண்மையான பிறழ் கூற்றுக்களை வெளிப்படுத்தும் என்பதற்கான ஒரு உத்தரவாதமாக இருக்கமாட்டாது. மோசடிகள் மற்றும் தவறுகள் தனியாகவோ அல்லது கூட்டாகவோ தாக்கத்தை ஏற்படுத்துவதன் காரணமாக பொருண்மையான பிறழ்கூற்றுக்கள் ஏற்படக்கூடியதுடன் இந்நிதிக் கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துபவர்களால் எடுக்கப்படுகின்ற பொருளாதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கவனித்தல் வேண்டும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக என்னால் தொழில்சார் வெளிப்படைத்தன்மை மற்றும் தொழில்சார் ஐயப்பாடுகளுடன் கணக்காய்வு மேற்கொள்ளப்பட்டது. என்னால் மேலும்,

- வெளிப்படுத்தப்பட்ட கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்கும் போது மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களில் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களினால் ஏற்படும் ஆபத்துக்களை இனங்காண்பற்கும் மதிப்பீடு செய்வதற்குமாக சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகள் திட்டமிடப்பட்டு அமுல்படுத்தப்பட்டன. பிழையாகக் காட்டுவதன் காரணமாக ஏற்படுகின்ற பொருண்மையான பிறழ்கூற்றுக்களிலிருந்து இடம்பெறுகின்ற தாக்கங்களை விட மோசடிகளால் இடம்பெறுகின்ற தாக்கங்கள் பாரியதாக இருப்பதானது தவறான கூட்டிணைவால், போலி ஆவணங்களைத் தயாரிப்பதனால், வேண்டுமென்றே விட்டுவிடுவதனால், பிழையாகக் காட்டுவதனால் அல்லது உள்ளகக் கட்டுப்பாடுகளைத் தவிர்ப்பதனால் மோசடிகள் ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கமல்லாதிருந்தும் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளைத் திட்டமிடும் வகையில் உள்ளகக் கட்டுப்பாடுகள் மீதான தெளிவொன்று பெற்றுக் கொள்ளப்பட்டது.

- பயன்படுத்திய கணக்கீட்டு கொள்கைகளின் பொருத்தமானதன்மை, கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத்தன்மை மற்றும் முகாமைத்துவத்தினால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புகளின் வெளிப்படுத்தல்கள் மதிப்பீடு செய்யப்பட்டன.

- நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடங்களுக்கு அடிப்படையான கொடுக்கல் வாங்கல்கள் நிகழ்வுகள் பொருத்தமாகவும் நியாயமாகவும் உள்ளடக்கப்பட்டுள்ளது எனவும் வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல் மதிப்பீடு செய்யப்பட்டது.

இயலுமான வரையிலும் தேவையான எந்தவொரு சந்தர்ப்பத்திலும் பின்வருவனவற்றை பரீட்சிப்பதற்காக விடயப்பரப்பு விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

- தகவல்கள் சமர்ப்பித்தல் தொடர்பாக பார்க்கும் போது பிரதேச சபையின் செயற்பாடுகள் தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யப்படக்கூடிய வகையில் அதன் ஒழுங்கமைப்பு, முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதியளவிலும் திட்டமிடப்பட்டுள்ளதா எனவும் அதன் முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமாக பேணிச்செல்லப்படுகின்றதா எனவும்

- ஏதேனும் உரிய எழுத்துமூல சட்டத்திற்கோ அல்லது பிரதேச சபையினால் வழங்கப்பட்ட பொது அல்லது விசேட ஏற்பாடுகளுக்கு இணங்க பிரதேச சபை செயற்பட்டுள்ளதா எனவும்

- தனது அதிகாரங்கள், இலக்குகள் மற்றும் பணிகளுக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும்

- வளங்கள் சிக்கனமாகவும், செயற்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் கால எல்லைக்குள் மற்றும் உரிய சட்ட விதிகளுக்கு இணங்க பெறுகை செய்யப்பட்டுள்ளதாகவும்

## 1.5 ஏனைய சட்டத்தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் கீழே குறிப்பிடப்பட்ட தேவைப்பாடுகள் தொடர்பாக விசேட ஏற்பாடுகள் உள்ளடக்குகின்றன.

(அ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 6(1)(ஈ)(iii) ஆம் பிரிவின் தேவைப்பாடுகளின் பிரகாரம் பிரதேச சபையின் நிதிக்கூற்றுக்கள் முன்னைய ஆண்டுடன் ஒத்திருக்கின்றன.

(ஆ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 6(i)(ஈ)(iv) ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைப்பாடுகளின் பிரகாரம் முன்னைய ஆண்டிற்குரிய நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக என்னால் மேற்கொள்ளப்பட்ட பின்வரும் பரிந்துரைகள் செயற்படுத்தப்பட்டிருக்கவில்லை

| பிரிவுடனான தொடர்பு | கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| 1.2.1 (இ) | பௌதீக ரீதியாக இல்லாத ரூபா 2,531,143 பெறுமதியான களஞ்சியப் பொருட்கள் களஞ்சிய இருப்பாக இருப்புக் கணக்கில் பதிவு செய்யப்பட்டிருந்தது. | எதிர்காலத்தில் சீராக்கம் செய்ய செய்வதற்கு நடவடிக்கை எடுப்பேன். | வருட இறுதித் திகதியில் பௌதீக இருப்பு மீதி கணக்கீடு செய்து கணக்குகளில் காண்பிக்கப்பட வேண்டும். |
| 1.2.2 | கணக்காய்விற்காக சமர்ப்பிக்கப்பட்ட நிதிக் கூற்றுக்களில் காண்பிக்கப்படும் மீதிகள் மற்றும் பயன்பாட்டு பதிவேடுகள் / அட்டவணைகளில் காணப்படும் மீதிகளுக்கு இடையே ரூபா 104,342,543 ஆன வேறுபாடொன்று அவதானிக்கப்பட்டது. | எதிர்காலத்தில் சீராக்கம் செய்ய செய்வதற்கு நடவடிக்கை எடுப்பேன | உரிய மீதிகளின் வேறுபாடுகள் ஒப்பிடப்பட்டு கணக்கினை சீராக்கம் செய்ய வேண்டும். |

## 1.6 நிதிக்கூற்றுக்களை தயாரிப்பது தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள்

### 1.6.1 உள்ளுராட்சி மன்றங்கள் தொடர்பான இலங்கை பொதுத் துறை கணக்கீட்டு நியமங்களுடன் இணங்காமை

| | உரிய நியமங்களுக்கு இணங்காமை | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 3.9 ஆம் பிரிவின் பிரகாரம் நிதிக் கூற்றுகளில் பாதீடு செய்யப்பட்ட தகவல்கள் அதாவது ஆரம்ப பாதீடு, இறுதி பாதீடு மற்றும் இதற்கிடையே போதியளவு வேறுபாடு இருந்தால் அவற்றிற்குரிய காரணங்கள் வெளிப்படுத்தப்பட்டிருக்க வில்லை | ஏற்றுக்கொள்கி றேன். | நியமத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஆ) | 6 ஆம் பிரிவின் பிரகாரம் 2020 ஆம் ஆண்டிற்கு முன்னர் நிர்மாணிக்கப்பட்ட ஒழுங்கைகள் மதகுகள் மற்றும் பாலங்கள் என்பவற்றின் பெறுமதி கணக்கீடு செய்யப்படாதிருந்ததுடன் 2020 ஆம் ஆண்டின் போது நிர்மாணிக்கப்பட்ட ஒழுங்கைகள், மதகுகள் மற்றும் பாலங்கள் என்பவற்றிற்கான பெறுமதி மதிப்பீடு செய்யப்பட்டு உள்ள பெறுமதி மாத்திரம் ஆதனங்கள், பொறிகள் மற்றும் உபகரணங்களின் கீழ் ரூபா 240,360,314 என கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. | ஏற்றுக்கொள்கி றேன். | சுற்றறிக்கையின் பிரகாரம் வெவ்வேறாக இனங் காணக்கூடிய வகையில் 2020 ஆம் ஆண்டிற்கு முன்னர் உள்ள அனைத்து ஆதணங்கள், பொறிகள் மற்றும் உபகரணங்கள் பதிவேடுகளுக்கு உட்படுத்தி கணக்கீடு செய்யப்பட வேண்டும். |
| (இ) | 4.6 ஆம் பிரிவின் பிரகாரம் காணி, கட்டிடங்கள். நூலக புத்தகங்கள் மீள்மதிப்பீடு செய்யப்பட்டிருக்கவில்லை. | ஏற்றுக் கொள்கிறேன். | நியமத்தின் பிரகாரம் காணி, கட்டிடங்கள் மற்றும் நூலக புத்தகங்கள் மீள் மதிப்பீடு செய்யப்பட்டு கணக்கீடு செய்யப்பட வேண்டும். |
| (ஈ) | 9.9 ஆம் பிரிவின் பிரகாரம் விரிவான வருமானக் கூற்றில் உள்ள வரவுகளின் உருவாகாத அரசினால் கையளிக்கப்படும் உரித்து வேறாக கூறொன்றாக சொத்துக்கள் மற்றும் பொறுப்புக் கூற்றில் ரூபா 189,378,640 ஆன செலவு மீதியொன்றாக காண்பிக்கப்பட்ட போதும் அப்பெறுமதி இனங்காணப்பட்ட முறை வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை. | ஏற்றுக் கொள்கிறேன். | நியமத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (உ) | 10.9 ஆம் பிரிவின் பிரகாரம் நடைமுறை மற்றும் ஒப்பந்த வேலைகள் தொடர்பாக பூர்த்தி செய்யும் கட்டத்தினை தீர்மானிப்பதற்காக பயன்படுத்தப்பட்ட முறை வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை. | ஏற்றுக் கொள்கிறேன். | நியமத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | |
|---|---|---|
| (ஊ) 15.13 ஆம் பிரிவின் பிரகாரம் சபையின் மீண்டெழும் மற்றும் பரிமாற்றம் செய்யப்படாத கொடுக்கல் வாங்கங்களில் கிடைக்க வேண்டிய பணத்தை அறவிட முடியாது என பதிவழிக்கும் ஏதேனும் பெறுமதி மற்றும் அதற்கான அங்கீகாரம் வெவ்வேறாக வெளிப்படுத்தப்பட்டிருக்க வில்லை. | ஏற்றுக் கொள்கிறேன். | நியமத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

### 1.6.2 கணக்கீட்டு குறைபாடுகள்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (அ) ரூபா 4,903,770 பெறமதியான 21 டேலர்கள், நான்கு சக்கர உழவு இயந்திரமொன்று, 04 மிதி வண்டிகள் முச்சக்கர வண்டியொன்றும் 06 வண்டில்கள் மற்றும் பெறுமதி கண்டுபிடிக்க முடியாத டேலர் வண்டியொன்றும் நன்கொடையாக கிடைத்த கம்பெக்டர் வண்டியொன்றும் மீள்மதிப்பீடு செய்யப்பட்டு ஆதனங்கள், பொறிகள் மற்றும் உபகரணங்கள் என கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை. | ஏற்றுக்கொள்கிறேன். | சரியாக அனைத்து வாகனங்கள் மற்றும் இயந்திரங்கள் மீள்மதிப்பீடு செய்யப்பட்டு கணக்கீடு செய்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஆ) மீளாய்வாண்டின் போது நடைமுறை வேலைகளில் ரூபா 188,287,828 ஆன ஒழுங்கைகள், மதகுகள், பாலங்கள் எனவும் வேலைகள் ஆரம்பிக்கப்பட்டு நடைபெற்றுக் கொண்டிருக்கும் 7 கட்டிடங்களின் பெறுமதி ரூபா 36,028,069 கட்டிடங்களாக கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. | ஏற்றுக்கொள்கிறேன். | சரியாக கணக்கீடு செய்ய நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (இ) கடன்கொடுத்தோராக கணக்கீடு செய்யப்பட்டிருந்த கனணி ரூபா 526,500, அலுவலக உபகரணங்கள் ரூபா 115,155, பொருத்திகள் ரூபா 15,444, தளபாடங்கள் ரூபா 1,383,050 மற்றும் தீ பாதுகாப்பு ஆடை தொகுதி ரூபா 60,390 என்பன நடைமுறை வேலைக்குப் பதிலாக ஆதனங்கள் பொறி மறறும் உபகரணங்களாக கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. | ஏற்றுக்கொள்கிறேன். | சரியாக கணக்கீடு செய்ய நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஈ) மாகாண சபை நிர்மாணக் கடன் கொடுத்தோர் ரூபா 6,675,117 தொகையும் பொது நிர்மாணக் கடன் கொடுத்தோர் ரூபா 42,060,855 தொகையும் மீளாய்வாண்டின் நடைமுறை வேலைக்காக மீண்டெழும் செலவினமாக கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. | பொது நிர்மாணக் கடன் கொடுத்தோரின் பெறுமதி ரூபா 42,060,854 என ஏற்றுக் கொள்கிறேன். | சரியாக கணக்கீடு செய்ய நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (உ) | 2020 ஆம் ஆண்டில் ரூபா 4,640,000 இற்கு கொள்வனவு செய்த டிபர் வண்டி மீள் மதிப்பீடு செய்யப்பட்டு மீண்டும் 2020 ஆம் ஆண்டு சேர்த்தல்களின் கீழ் ரூபா 4,268,800 என கணக்கீடு செய்த காரணத்தினால் மோட்டார் வாகனங்களின் பெறுமதி ரூபா 4,268,800 மற்றும் இதற்காக பெறுமானத் தேய்வு செய்யும் போது ரூபா 185,600 கூடுதலாக கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. | ஏற்றுக்கொள்கிறேன். | சரியாக கணக்கீடு செய்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஊ) | மீளாய்வாண்டின் போது நன்கொடையாக கிடைத்த ரூபா 66,580 பெறுமதியான நூலகப் புத்தகங்களின் பெறுமதி நன்கொடையாக கிடைத்தற்கு பதிலாக ஒதுக்கம் மற்றும் ஒதுக்கீட்டு கணக்கிற்கு செலவு வைக்கப்பட்டமையால் உரிமை கூடுதலாக காண்பிக்கப்பட்டிருந்தது. | ஏற்றுக்கொள்கிறேன். | சரியாக கணக்கீடு செய்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (எ) | மீளாய்வாண்டின் போது மீண்டெழும் செலவினம் அல்லாத செலவினங்களுக்காக அரசினால் மேற்கொள்ளப்பட்ட மாற்றல்களின் பெறுமதி ரூபா 18,290,398 ஆக இருந்த போதும் அது ரூபா 189,378,639 என சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் கூற்றில் இனங்காணப்படாத மூலதன மானியங்கள் ரூபா 171,088,241 ஆக இருந்த போதும் ரூபா 189,378,639 எனக் கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. | மீளாய்வாண்டிற்குரிய மூலதன மானிய பெறுமதியில் விரிவான வருமானத்தில் இனங்காணப்பட வேண்டிய மூலதன மானியப் பெறுமதி ரூபா 18,290,390 என ஏற்றுக் கொள்கிறேன். | மூலதன மானியங்கள் சரியாக இனங்கண்டு கணக்கீடு செய்தல் வேண்டும். |
| (ஏ) | சபையின் பழுதடைந்த பொருட்கள் களஞ்சியத்தில் 2015 மார்ச் 25 ஆந் திகதி தீயினால் இடம்பெற்ற ரூபா 2,177,441 ஆன நட்டத்திலிருந்து குறித்த பாதுகாப்பு பிரிவிடமிருந்து மேலும் அறவிடப்பட வேண்டிய ரூபா 612,895 தொகை கணக்கீடு செய்யப்பட்டிருக்க வில்லை. | ஏற்றுக்கொள்கிறேன். | சரியாக கணக்கீடு செய்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஐ) | 2017 ஆம் ஆண்டில் களஞ்சியத்திற்கு கிடைத்த உடற்பயிற்சி உபகரணங் களுக்காக கடன் கொடுத்தோர் ஒதுக்கீடு செய்யாமை மற்றும் அந்த உபகரணங்களுக்காக 2018 ஆம் ஆண்டின் போது மாகாண சபை களஞ்சிய முற்பணத்தின் கீழ் ரூபா 4,586,387 ஆன கொடுப்பணவு செய்தமை காரணமாக இடம் பெற்றுள்ள தவறினை திருத்தம் செய்யாமையால் இந்த அளவினால் திரண்ட நிதி கூடுதலாகவும் இனங் காணப்படாத களஞ்சிய மீதி கூடுதலாகவும் கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. | ஏற்றுக்கொள்கிறேன். | இனங்காணப் படாத களஞ்சிய மீதி இனங் காணப்பட்டு சீர் செய்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஔ) | 2019 ஆம் ஆண்டிற்குரிய நிலையான வைப்பு வட்டி ரூபா 301,727 மீளாய்வாண்டின் வட்டியாக கணக்கீடு செய்யப்பட்டிருந்ததுடன் மீளாய்வாண்டிற்கு கிடைக்க வேண்டிய வட்டி ரூபா 215,364 கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை. | ஏற்றுக்கொள்கிறேன். | வருடத்திற்குரிய வைப்பு வட்டி அளவினை சரியாக இணங்கண்டு கணக்கீடு செய்தல் வேண்டும். |
| (ஓ) | 2020 ஆம் ஆண்டில் கொள்வனவு செய்யப்பட்டிருந்த ரூபா 1,499,952 பெறுமதியான அலுவலக உபகரணங்கள் ஆதனங்கள், பொறிகள் மற்றும் உபகரணங்களின் கீழ் கணக்கீடு செய்யப்பட்டிருக்க வில்லை. | ஏற்றுக்கொள்கிறேன். | சரியாக ஆதனங்கள், பொறிகள் மற்றும் உபகரணங்கள் இணங்கண்டு கணக்கீடு செய்தல் வேண்டும். |
| (ஔ) | உள்ளுராட்சி மன்றங்களுக்கான இலங்கை பொதுத் துறை கணக்கீட்டு நியமத்தின் 4.6 ஆம் அத்தியாயத்தின் பிரகாரம் 2020 ஆம் ஆண்டிற்கு முன்னர் கொள்வனவு செய்யப்பட்டிருந்த இயந்திரங்கள், தளபாடங்கள் மற்றும் அலுவலக உபகரணங்கள் மீள் மதிப்பீடு செய்யப்பட்டிருக்கவில்லை. | ஏற்றுக்கொள்கிறேன். | சகல இயந்திரங்கள், தளபாடங்கள் மற்றும் அலுவலக உபகரணங்கள் மீள் மதிப்பீடு செய்து கணக்கீடு செய்ய நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (க்) | மீளாய்வாண்டினல் ஆதனங்கள், பொறிகள் மற்றும் உபகரணங்கள் கொள்வனவு ரூபா 61,671,945 ஆக இருந்த போதும் காசுப் பாய்ச்சல் கூற்றில் ஆதனங்கள், பொறிகள் மற்றும் உபகரணங்கள் கொள்வனவு ரூபா 56,595,785 என காண்பிக்கப்பட்டமையால் காசு வெளிப்பாய்ச்சல் ரூபா 4,712,160 ஆல் குறைத்து காண்பிக்கப்பட்டிருந்தது. | ஏற்றுக்கொள்கிறேன். | காசுப்பாய்ச்சல் கூற்று சரியாக தயாரிக்க நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (கா) | மீளாய்வாண்டில் காசாக கிடைத்த வட்டி வருமானம் ரூபா 7,465,952 ஆக இருந்த போதும் காசுப்பாய்ச்சல் கூற்றில் முதலீட்டு செயற்பாடுகளின் கீழ் உருவான காசுப்பாய்ச்சலின் வட்டி வருமானம் ரூபா 5,938,407 ஆன வெளிப்பாய்ச்ச லாக காட்டப்பட்டிருந்தது. | ஏற்றுக்கொள்கிறேன். | காசுப்பாய்ச்சல் கூற்று சரியாக தயாரிக்க நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (கி) | உள்ளுராட்சி மன்றங்கள் தொடர்பான இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமத்தின் 4 ஆம் பந்தியின் பிரகாரம் 2020 ஆம் ஆண்டிற்கு முன்னர் நிர்மாணிக்கப்பட்ட ஒழுங்கைகள் மதகுகள் மற்றும் பாலங்கள் என்பவற்றின் பெறுமதி கணக்கீடு செய்யப்படாதிருந்ததுடன் 2020 | ஏற்றுக்கொள்கிறேன். | அனைத்து ஒழுங்கைகள், மதகுகள் மற்றும் பாலங்கள் என்பன மீள்மதிப்பீடு செய்து கணக்கீடு |

| | |
|---|---|
| ஆம் ஆண்டின் போது நிர்மாணிக்கப்பட்ட ஒழுங்கைகள், மதகுகள் மற்றும் பாலங்கள் என்பவற்றிற்கான பெறுமதி மதிப்பீடு செய்யப்பட்டு உள்ள பெறுமதி மாத்திரம் ஆதனங்கள், பொறிகள் மற்றும் உபகரணங்களின் கீழ் ரூபா 240,360,314 என கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. | செய்யப்பட வேண்டும். |

### 1.6.3 இணங்காத கட்டுப்பாட்டு கணக்குகள் அல்லது அறிக்கைகள்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 10 கணக்கு விடயங்களுக்குரிய நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் பெறுமதி மற்றம் பயன்பாட்டு பதிவேடுகள் / அட்டவணைகளின் பிரகாரம் பெறுமதிகளுக்கு இடையே ரூபா 59,895,335 ஆன வேறுபாடொன்று அவதானிக்கப்பட்டது. | ஏற்றுக்கொள்கிறேன். | வேறுபாடுகளை இனங்கண்டு சீராக்க நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

### 1.6.4 அதிகாரமற்ற கொடுக்கல் வாங்கல்கள்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (அ) 2014 முதல் 2019 ஆம் ஆண்டு வரையான காலப்பகுதிக்குரிய மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி மன்ற கடன்பட்டோர் மீதிகளை பதிவழிப்பதற்கு ரூபா 13,996,612 அங்கீகாரம் வழங்கப்பட்டிருக்கவில்லை. | ஏற்றுக்கொள்கிறேன். | முறையான அங்கீகாரத்தைப் பெற்றுக்கொள்ளல் வேண்டும். |
| (ஆ) சபை தீர்மானமொன்று இல்லாமல் மீளாய்வாண்டின் போது ரூபா 13,411,064 ஆன கடன் கொடுத்தோர் மீதி பதிவழிக்கப்பட்டிருந்தது. | ஏற்றுக்கொள்கிறேன். | முறையான அங்கீகாரத்தைப் பெற்றுக்கொள்ளல் வேண்டும். |

### 1.6.5 கணக்காய்வு தொடர்பான எழுத்து மூல சான்றுகள் இன்மை

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| தேவையான தகவல்கள் சமர்ப்பிக்கப்படாமையால் ரூபா 118,024,519 கூட்டுத்தொகையான 07 கணக்கு வியங்களை கணக்காய்வின் போது திருப்திகரமாக உறுதிப்படுத்து வதற்கு முடியவில்லை. | ஏற்றுக்கொள்கிறேன். | அட்டவணைகளை சமர்ப்பிக்க நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் 2020 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்காக சபையின் மீண்டெழும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 216,747,584 ஆக இருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் மீண்டெழும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 249,970,498 ஆக இருந்தது.

### 2.2 வருமான நிர்வாகம்

#### 2.2.1 வருமானம் சேகரிப்பின் செயலாற்றல்

| | கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறு சபைக்கு அறவிடப்பட வேண்டிய வீதவரி ரூபா 57,260,035 ஆக இருந்ததுடன் அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்க வில்லை. | முறையாக நிலுவை வீதவரியை அறவிட நடவடிக்கை எடுப்பதற்கு 2020 ஆம் ஆண்டில் காணப்பட்ட கொவிட் வைரஸ் நிலைமை தாக்கமளித்திருந்தது. | நிலுவை வருமானத்தை அறவிடுவதற்கு விரைவில் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஆ) | 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் சட்டத்தின் 158(1) பிரிவின் பிரகாரம் நிலுவை வரியை அறிடுவதற்காக கட்டளையிட்டு செயலாளரினால் கையொப்ப மிடப்படுகின்ற அனுமதிப்பத்திர மொன்று அங்கு பெயர் குறிப்பிடப்பட்ட பிரதேச சபையின் பணம் சேகரிப்போருக்கு வழங்க வேண்டிய போதும் நிலுவை வரி ரூபா 17,150,019 இற்குரிய அறவீட்டு அனுமதிப்பத்திரம் வழங்கப்படாதிருந்தமை அவதானிக்கப்பட்டது. | முறையாக நிலுவை வீதவரியை அறவிட நடவடிக்கை எடுப்பதற்கு 2020 ஆம் ஆண்டில் காணப்பட்ட கொவிட் வைரஸ் நிலைமை தாக்கமளித்திருந்தது. | நிலுவை வரி தொடர்பாக பிரதேச சபை சட்டத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

## 3. செயற்பாட்டு மீளாய்வு

பிரதேச சபைச் சட்டத்தின் 3 ஆவது பிரிவின் கீழ் பொதுமக்கள் சுகாதாரம், பொது பயன்பாட்டுச் சேவைகள் மற்றும் பொது வீதிகள் தொடர்பான விடயங்களை முறைப்படுத்தல் மற்றும் நிர்வகித்தல், பொதுமக்களின் பொழுதுபோக்கு வசதிகள் மற்றும் நலன்புரி போன்ற சபையினால் நிறைவேற்ற வேண்டியிருந்த குறிக்கோள்களை நிறைவேற்றுதல் தொடர்பாக வெளிப்படுத்தப்பட்ட விடயங்கள் கீழே காண்பிக்கப்படுகின்றது.

### 3.1 செயலாற்றல்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | வீதிகள் பழுது திருத்த வேலைகளுக்காக கிடைக்கப் பெற்ற 3188 விண்ணப்பங்களுக்காக பிரதேச | முறையான மாதிரியொன்றை தயாரித்து முறைப்பாட்டிற்காக | விரைவாக வீதி பழுதுகள் திருத்தல் செய்யப்படல் வேண்டும். |

| | |
|---|---|
| சபைக்கு 9,148,179 ஆன வருமானமொன்று கிடைத்திருந்த போதும் 90 சதவீத விண்ணப்பங்களுக்குரிய வீதித் திருத்தம் பிரதேச சபையால் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. அதன் பிரகாரம் வருமானம் உழைத்த போதும் அதற்குத் தேவையான சேவைகளை தாமதமின்றி பொதுமக்களுக்கு வழங்குவதற்கு பிரதேச சபை கவனம் எடுக்கவில்லையென்பது அவதானிக்கப்பட்டது. | செயற்படுத்துவதற்கு தேவையான முறையான நடைமுறையொன்று தயாரிக்கப்பட்டு அதன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. |

## 4. கணக்களிதன்மையும் நள்ளாலுகையும்

### 4.1 சூழல் பிரச்சினைகள்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| **திண்மக் கழிவுப்பொருள் முகாமைத்துவம்** | | |
| சபை அதிகார பிரதேசத்தில் 91 கிராம சேவையாளர் பிரிவுகள் காணப்பட்ட போதும் அதில் 50 இல் மாத்திரம் கழிவுப் பொருள் சேகரிக்கப்படுகின்றது. ஒரு நாளைக்கு 35 தொன் அளவில் சேகரிக்கப்படுவதுடன் அது வேறாக்கப்பட்டு உக்கும் உக்காத கழிவுப் பொருட்களை ஹோமாகம நகர சபை மத்தியில் அமைந்துள்ள தூவவத்த கழிவுப் போருள் தொகுதிக்கு கொண்டு வரப்படுவதுடன் ஒப்பந்த நிறுவனத்தின் மூலம் கரதியானவிற்கு போக்குவரத்து செய்யப்படுகின்றது. மீளாய்வாண்டில் போக்குவரத்திற்காக தனியார் நிறுவனமொன்றிற்கு ரூபா 13,626,864 மற்றும் கழிவுப் பொருள் முகாமைத்துவ அதிகாரசபைக்கு ரூபா 6,370,230 என கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது. பிரதேச சபை சட்டத்தின் 93 ஆம் பிரிவின் பிரகாரம் கழிவுப் பொருள் முகாமைத்துவம் தொடர்பாக வருடாந்த திட்டமொன்று தயாரிக்கப்படாதிருந்ததுடன் சபைக்கு சொந்தமாக வாகனமொன்று காணப்படும் போது ஒவ்வொறு ஆண்டும் கழிவுப் பொருள் போக்குவரத்திற்காக ரூபா 20 மில்லியன் அளவில் செலவிடப்படுவதால் அதற்காக சபை முறையான வேலைத்திட்டமொன்று தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. | கழிவுப் பொருள் முகாமைத்துவம் தொடர்பான திட்டமொன்று தயாரிக்கும் போது அதற்காக கழிவுப் பொருள் முகாமைத்துவம் தொடர்பாக விஷேட நிறுவனங்களினதும் ஒத்துழைப்பை பெற்றுக் கொள்வதற்கு தேவையான கடந்த ஆண்டுகளில் காணப்பட்ட கொவிட் தொற்று காரணமாக சிரமமாக இருந்தமையால் இவ்வாண்டின் 2022 மேல் மாகாண கழிவுப் பொருள் முகாமைத்துவ அதிகாரசபையால் ஐந்தாண்டு திட்டத்திற்கு இணையாக வருடாந்த திட்டம் தயாரிக்கப்படுகின்றது. சபைக்கு சொந்தமான வாகனம் 91 கிராம சேவை பிரிவுகளிலும் செயற்படுவதற்கு போதுமாக இல்லாததுடன் வேறு சேவைகளுக்கும் மிகவும் சிரமமாக வாகனம் ஈடுபடுத்தப்படுகின்றது. | செயற்திறனாக திண்ம கழிவுப் பொருள் முகாமைத்துவம் செய்யப்படல் வேண்டும். |